உ

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதிதுணை.

# திருவருட் பிரகாசவள்ளலார்
# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

ஷடாந்த சமரசசுத்த சன்மார்க்க சங்கத்தலைவரும்
உத்தரஞான சித்திபுரச் சிற்சபை வருத்தவருமாகிய
திருவருட் பிரகாசவள்ளலார்,
சிதம்பரம்
## இராமலிங்க சுவாமிகள்மேல்,

திரிசிரபுரம் ஸ்ரீலஸ்ரீ
மஹாவித்வான் சித்தாந்த ரத்நாகரம்
அ. வேங்கடசுப்புப்பிள்ளை யவர்களாலியற்றி

பெங்களூரில் வணிகர் குலதிலகரும்
டை சுவாமிகள் திருவடிக்கன்பருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ ம. அப்பாசாமி செட்டியாரால்

பெங்களூர் தண்டு:
நேஷனல் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.
பிலவ ஹு மாசி மீ 3உ

1902,
(Copy Right Registered.)

தொ. வே. செங்கல்வராயன்

342

உ

இஃ

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதிதுணை.

# திருவருட் பிரகாசவள்ளலார்
# பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

ஷடாந்த சமரசசுத்த சன்மார்க்க சங்கத்தலைவரும்

உத்தரஞான சித்திபுரச் சிற்சபை வகுத்தவருமாகிய

**திருவருட் பிரகாசவள்ளலார்,**

சிதம்பரம்

**இராமலிங்க சுவாமிகள்மேல்,**

திரிசிரபுரம் ஸ்ரீலஸ்ரீ

மஹாவித்வான் சித்தாந்த ரத்னாகரம்

அ. வேங்கடசுப்புப்பிள்ளை யவர்களாலியற்றி

பெங்களூரில் வணிகர் குலதிலகரும்

ஷை சுவாமிகள் திருவடிக்கன்பருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ ம. அப்பாசாமி செட்டியாரால்

பெங்களூர் தண்டு:

நேஷனல் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

பிலவ௵ மாசி௴ 3௳

1902.

(Copy Right Registered.)

உ

இஃது

சென்னை வைசியவணிகர் குலப் பெரியதனக்காரரும், திருவொற்றியூர் அகத்தீசுரர் தேவதான தர்மகர்த்தருமாகிய,

ஸ்ரீலஸ்ரீ கோவளம் அப்பாசாமி செட்டியார் இயற்றியது.

## சிறப்புப்பாயிரம்.

### வெண்பா.

பொருணயமுஞ் சொன்னயமும் பொற்பு மிகுத் தோங்குந்
தெருணயமுங் காட்டிச் சிறக்கும்-அருணன்
றுதித்தனவி ராமலிங்க வொண்குருமேற் சாற்றும்
பதிற்றுப்பத் தந்தாதி பார்.

உ

## திருச்சிற்றம்பலம்.

### நிலைமண்டில ஆசிரியப்பா.

அருட்பெருஞ் சோதி யாந்தனிச் சிவமே
தெருட்பெரு முத்தருஞ் சித்தரும் வியப்புற
உலகின் மன்னுயி ருவப்புற மலவிருள்
விலகிக் கரந்திட விளங்குபன் மதத்தரும்
சமரசச் சுத்த சன்மார்க்கத்தினை
யமைவுட னுணர்ந்தங் கபேத நலம்பெறத்
திருவருண் மேனி சிறந்துறக் கொண்டு
வெருவற மேதினி மேலவ தரித்தெனச்
செய்தவ மனைத்துந் திரண்டு வந்துற்றென
ஐதருள் விளங்க அவதரித்திட்டவன்
சற்குணக் கடலாய்த் தழைத்த தூயவன்
சிற்குணக் கடலுளந்தெளிந்து படிந்தவன்
தயவலா லொன்றைத் தானறியாதவன்
உயவெலாச் சமயத் துண்மை கண்டுணர்ந்தோன்







Scanned by CamScanner

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட் பிரகாச வள்ளலார்
# பதிற்றுப் பத்தந்தாதி.

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மேகம்போற் கருணைபொழி யருட்பிரகா சப்பெருமான் மிகுதிராட்சைப்
பாகம்போன்மெனவாறு திருமுறைசேர் திருவருட்பாப்பகர்செவ் வாயான்
மோகம்போக் கியராம லிங்ககுரு பரற்கணிவான் மொழியப்புக்க
சோகம்போம் பதிற்றுப்பத் தந்தாதிக் கானைமுகன் றுணைத்தாள்காப்பே.

சித்தர்குல சேகரனி ராமலிங்க தேசிகன்மேற் செவந்திமாலை
சுத்தமுறத் தொடுத்தணியும் பரிசெனச்செந் தமிழ்மொழியாற் றொடுத்துச்
பத்திவிளை பதிற்றுப்பத் தந்தாதி பாகமுறப் பகர்தற் கன்னேன்[சாத்தும்
வைத்தருளும் பெருங்கருணை துணையாக வவன்மலர்த்தாள் வணங்கி வாழ்
[வாம்.

இந்தமிழ்தம்போலினிப்பாள் வெண்பளிங்குபோலுருவாளிசையார்சங்கச்
செந்தமிழ் தந்தொளிர் தருமான் வெண்கமலா சனச்செல்வி திருத்தமாக
நந்தமிழ்தண் கடனிகரும் பேரருள்செய் தெனதுசெந்நா நயந்திருந்தாள்
வந்தமித வருள்பொழியி ராமலிங்கதேசிகன்சீர் வழுத்தத்தானே.

## நூல்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தேரூர்ந்து மேருவலன் சூழ்தருமோர் செங்கதிர்போற் றிகழ்ந்து வற்று
நீரூர்ந்த கடலுலகி லருட்கிரணந் தனைப்பரப்பி நெடியமூலக்
காரூர்ந்த குப்பாய நீக்கியருட் பெருஞ்சோதி காணக்காட்டுந்
தாரூர்ந்த வயங்கெழுதோ ளிராமலிங்க குருவடலூர்ச் சபைகண்டோனே.

கண்டாய்நீ வடலுறுசிற் சபையுளருட் பெருஞ்சோதி கண்ட பின்னே [ய்
கொண்டாய்நீள்மோனபதங்கல்லாலின் புடையமர்ந்தோன்கோலம்பூண்ட
தண்டாய்நீங்காத்தொழும்பருடனின்று யெனையுனடித்தண்டேன்மாந்தும்
வண்டாநீர் மையனுகப் பணித்தியருட் பிரகாச வள்ள லானே, (2)

வள்ளலாய் வடலூருள் வருவார்க்கு னருளமுதம் வழங்கா நின்றாய்
கொள்ளலாம் பரிபாக மின்மையினாற் பரிந்தேத்திக் கொளமாட்டாம
லெள்ளலா மலத்தழுந்தி மாழாந்தே னெனக்குமெந்தா யிரங்குவாயோ
பொள்ளலா மலவுடல்பொன் னுடலாக்கு மிராமலிங்கப் புனிதத்தேவே()

தேவேமெய்ஞ் ஞானவருட்பிரகாச வள்ளலெனத் திகழா நிற்கும்
கோவேயெண் குணமலையே வடலூருசிற் றம்பலத்துட் குலவுஞானப்
பூவேயப் பூமணமே மணங்கமழ்செந்தேனேநின் பூந்தாட் கென்சொற்
பாவேறத்தொண்டுகொண்டாய்முன்னெதுமா தவம்புரிந்தேன்பதகனேனே

பதமலரைக்கும்பிடுவோர் குறிக்கொண்டு நாவாரப் பாடாநிற்போர்
நிதமலரைச் சொரிந்திடுவோ ரிதயமலர் மிசையிருத்தி நினையா நிற்போர்
மதமலரை நிகருமகத் தருக்கொழிந்தோர் தரிசிக்க வடலூர் வாயற்
புதமலர வருஞான சித்தசிகா மணியேயெற் புரந்தாள் வாயே. (5)

புரப்பாயிச் சிறுநாயேன் றனையெனநின் மலர்ப்பாதம் போற்றா நின்றேன்
இரப்பாருக் கிரங்குநர்போ லெனக்கிரங்கி யருள்புரிய வெண்ணுகண்டாய்
வரப்பாவ லோர்வணங்கத் தக்கவருட் பிரகாச வள்ள லேபுன்
னிரப்பாலெய்த் தவர்க்கருளுங் கற்பகமே யிராமலிங்க நிமலவாழ்வே. (6)

வாழ்வனைத்து நின்மலர்க்கட் கடைநோக்கா லன்பர்பெற வழங்கி யன்னார்
தாழ்வனைத்து மவர்பகைவர் தமைச்சாரப் புறம்போக்குந் தயவு ளானீ
சூழ்வனத்து வடலூருட் கதிர்மதிதீ மண்டலத்துட் சோதிபோலூழ்
போழ்வனப்புத் திகழ்தரவாழிராமலிங்கா ரியநின்றாட் புகல்புக்கேனே (7)

புகன்றார்க்குன் சீர்நினைப்பார்க் கருள்காமதேனுவெனப் பொலிந்துளாய்நீ
யிகன்றார்முன்னெனைப்பாதுகாத்தருளும்பெருந்துணை நீ யெனவடைந்தே
னகன்றாழ்ந்தவருட்கடலே வடலூருசிற்சபைமருவு மருட்சோதிக்கோர்
மகன்றானென் றெணவிளங்கு மிராமலிங்ககுருவேகண் மணியன்னானே(8)

அன்னையொப்பாயத்தனொப்பாயிருநிதியம்போல்வாய்நின்னடியனேற்கோ
மன்னையொப்பா யுனதுதிரு வடித்துணையே புகலாக வழிபாடாற்று [ர்
மென்னையொப்பாருணர்வில்லார் பிறருளரோ வெனையுனருட்கிலக்காவைப்
பொன்னையொப்பா யருட்பெருஞ்சோ தியைப்போற்று மிராமலிங் [பாய்
கப் புலவரேறே.

Scanned by CamScanner

புலவர்புகழ் சைவநெறிக் குரவரொரு நால்வர்பதம் போற்றி யன்னார்
நிலவுபெருங் கருணைதனக் கிலக்காகிப் பரம்பரன் சீர் நிகழ்த்தி நின்றாய்
மலவலிநீத் தருள்வலிபெற் றெல்லாஞ்செய் வல்லசித்தாய் வடலூர்வாழுங்
குலவரையே யிராமலிங்க குருமணியே குறைதவிர்த்தாட்கொள்ளு வாயே.

## வேறு.

வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர் வசத்தனாய் மறனெலா மியற்றி
நாயிலோர் கடைய னாயினே னந்தோ நரகிடை விழாமலென் றனை நீ
தாயிலோர்கருணைகாட்டியாண்டருள்வாய்தமியனேனின்சரணடைந்தேன்
காயிலோர் புகலு மில்லைகாண் வடலூர்க்கத்தரா மலிங்கசற் குருவே. (11)

குருபரனெனவே குவலயத் தறிஞர் குறிக்கொளச் சிவநெறி விளக்கி
யொருபர ஞான மெய்தியாறந்த முஞ்சம ரசமெனத்தெரித்தாய்
வருபர வுணர்வில் வயங்குபே ரொளியே மன்னுசீர் வடலூறு மோன
சொருபமே யிராம லிங்கவாரியனே சோர்வற வென்னையாண்டருளே (12)

என்னையாண் டருளுமெலாம்வல்லசித்தே யெழில்வடன்மேவுசிற்சபையிற்
றன்னையாண் டவனுச்சகத்துளோர் மதிக்கத் தன்னிகர்ஞானநாடகஞ்செய்
மன்னையாண் டேத்திபருட்பெருஞ்சோதிவடிவுபெற்றொளிர்தருங்கோவே
மின்னையாண் டிருக்கு மிடத்திரா மலிங்க விகிர்தனே யுய்யுமாறுரையே()

உய்யுமாறுரையா யுன்பத மடுத்தே னுன்புக ழியம்பிடுகின்றேன்
ஐயனே களைக ணீயென நினைத்தே னருட்பெருஞ் சோதிவாழ் வடலூர்த்
துய்யனே யிராம லிங்கமா மணியே துணைவனேயணைதியென் றிறைஞ்சிப்
பொய்யனே னினையேநம்பினேனென்னைப் புனிதனுச்செயவல்லவரசே()

வல்லவா வடலூ ரருட்பெருஞ் சோதி வாழ்வினைத் தாழ் வறப்பெற்ற
நல்லவா தூய வருட்பிர காச நற்றவா நினதுசந் நிதிச்சீர்
சொல்லவாக் களித்தராமலிங் காநின் றுணையடி துணையெனப் பிடித்தேன்
பல்லவா வுலகர் மதித்திடவேண்டும் பரிசெலா மீந்தருளெனக்கே. (15)

எந்தனை யுனையேத் திடுமதியதனா லெனைப்பணி கொண்டனை வடலூர்
வேந்தனி லோங்குமருட்பிர காச வித்தகா வான்மசொ ரூப
மாந்தனி யதுல வான்பொரு ளானா யடியனேற் குறிக்கொளல் வேண்டுஞ்
சாந்தநற் பதமே திகழிரா மலிங்க சற்குரு மாணிக்கமணியே. (16)

Scanned by CamScanner

மாணிக்க வாச கப்பெரு மான்சொன் மலர்த்தமிழ்த் தேனைவாய் மடுத்து
காணிக்கை யாக வருட்பெருஞ் சோதிக்கடவுளைப் புகழ்ந்தபா வலங்கல்
பேணிக்கு நறுஞ்சா றெனவினித் திடநீ பேசினை திருமுறை யாறும்
வாணிக்கு வரம்பா மருட்பிரகாச வள்ளலாய் வயங்குமா தவனே. (17)

மாதவச் சித்த சிகாமணி யெனவே வயங்கிய ஞானசற் குருநீ
யாதவற் றிணையா வெனதகத்திருளை யறுத்தது பளிங்கென விளங்க [சே
வோதவத் தைகளையொழித்தெனைக் காட்டியொளிர்ந்தனைவாழியென்னர
நீதறு மிராம லிங்கமா மணியே சேதனர் போற்றவாழ் பவனே. (18)

பவந்தனை யீட்டிப் பதைத்தபல்பிறப்பும் பயன்பட விம்மையேயெனக்குச்
சிவந்தனை வடல்வா ழருட்பெருஞ் சோதித் திருவினை வழங்கவல்லவனீ
யுவந்தனை யெனையுந்தொண்டுகொண்டனையீ துண்மையேயுய்யுமாறருளாய்
தவந்தனை யுலகர் தம்பொருட் டாற்றுந் தனியிரா மலிங்கநாயகனே.(19)

இராமலிங் காய நமவெனப்பணிவோ ரிடருறார் நலமெலாம்பெறுவார்
அராமலிந் தாடு சடையனூர் வடலூ ரருட்பெருஞ் சோதியாரருளா
னிராமயங் குலவ வருட்பெருஞ் சித்து நினைந்தவா றுறுவர் மீட்டும்
வராமலின் பத்தேனுகர்வர்தாமெனவே மதிஞர்சொன்முழங்குவமாதோ()

**வேறு.**

மாதர் மையலற் றில்லற வாழ்வினை யொறுத்து
வேத மோது மெய்ப் பொருளினை வேட்டுளத் துறவே
போது மென்றுசொற் றெண்டொடு மாதவம் புரிந்த
நீத ராமலிங் காரிய நின்னடி சரணம் ... ... ...(21)

சரணஞ் சார்ந்தவர்க் கிரங்குநற் றயவுசா லந்தக்
கரண மேயரா மலிங்கர்தாட் கமலமே சனன
மரண நீங்கவென் சென்னிமேல் வைகியஞ் ஞான
வரணம் பேர்த்தலின் மவுனவான் சுகமரு விடுமே ... ... (22)

மருவு நின்னருட் பாவினில் வருமுதல் வெண்பாத்
தெரிவ ருங்கதி தெரிக்குநூன் முழுவதுந் தேர்வோர்
குரவ ராயுலகோர்குறிக் கொள்ளவாழ்குவரேற்
பொருவி லாதரா மலிங்கநின்புகழ்கண்டார் புகல்வார்... ... (23)

Scanned by CamScanner

வார மோங்குநின் றிருவருட் பாவினுள் வழுத்து
நாரி பாகனார் திருவடிப் புகழ்ச்சிதேர் நலத்தோர்
ஆரி யத்திரு மறைப்பொரு ளறிந்துய்கு வாரேல்
யார ளந்தறி குவரிரா மலிங்கநின் னிசையே ... ...(24)

இசையி னேடிய னுடகத் தமிழ்வடக் கெல்லை
யசல வேங்கடம் போன்றுதன் டணிகைவே ளருளா
னசையு ளூதமெய்ஞ் ஞானசம் பத்தெலா நண்ணு
விசசொ ரூபரா மலிங்கமென் வாழ்முத னிதியே ... ...(25)

நிதியு மீகுவ னிடமுடனேயவு நேர்வன்
கதியு மீகுவன் கற்பவை கற்றவ ரவையிற்
பதியு மாகவைத் தருளுவன் றன்பதம் பரவும்
விதியு ளார்க்கிரா மலிங்கவே ளென்பர்மே லவரே ... ...(26)

மேலு லாஞ்சித்தர் மதித்திடச் சித்தெலாம் விளங்கிக்
கால மூன்றையுங் கருத்தினுட் கண்டுவாழ் நினைக்கல்
லாலின் கீழமர் தக்ஷிணா மூர்த்தியென் றடைந்தேன்
சீல மேவிரா மலிங்கதே சிகவருள் செய்யே ... ...(27)

செய்யுண் மாலைநின் சேவடி புனைந்திடுஞ் சிறியேன்
பையு ணீங்கியுய் பாக்கருள் பாலிக்க வேண்டு
மையுண் கண்ணியர் மாலறவென்றரா மலிங்கத்
துய்ய னேவடல் வாழ்வெனத் துலங்குகின் றவனே ... ...(28)

துலங்கு சிர்வட லருட் பெருஞ் சோதிவாழ் சவையை
யிலங்கத் தோற்றுவித் தலகில் சித்தாடுவா னெண்ணி
விலங்கு ரூதநற் சமாதியின் மேவுமா தவரா
மலிங்க தேசிகா வென்றனை வாழ்விக்க நினையே ... ...(29)

நினையு நின்னடித் தாமரை நெஞ்சிடை நிறுவி
வினையு மென்றமிழ் மாலையைச் சூட்டுபு வணங்கு
மெனையு நின்றிருத் தொண்டருட் கூட்டுதற் கிசைவா
யனையு மத்தனு மாமிரா மலிங்கவா ரியனே ... ...(30)

(வேறு)

ஆரூரன் பசிநீங்கக்கச்சூர்க்கோயி
லரனார்முன் சோறூட்டிக்காத்ததே போற்
றேரூருந் திருவீதியொற்றியூரிற்
றியாகேசர் நின்பசிகண் டிரங்கியோர்நாள்
காரூருநள்ளிரவி லன்ன மூட்டிக்
களைமாற்றித் தாய்நீர்மை காட்டி னாரே
னீரூருஞ் சடைமுடியா ரிராமலிங்க
நெடுந்தகைநின் றொண்டுவந்தாரென்னலாமே. ... ...(31)

என்னிசைப்பே னின்மகிமை வடலூர்தன்னி
லெந்தாய்நீ மோனபதம் புகுந்தபின்னர்
நின்னதுசந் நிதிகண்டுபுதல்வர்சூழ
நேயமொடுதிரும்பியதோர் மடவாளாங்கே
மன்னியதோர் நதிநீத்தங் கடக்கமாட்டாள்
வருந்திநிற்க வெதிர்போந்துநீத்தந்தானே
நன்னர்வழி விடப்பணித்துக் கடத்திக் காத்தாய்
நற்றுணைவா விராமலிங்கச் சித்தர் கோவே ... ...(32)

சித்தர்சிகா மணியேயி ராம லிங்க
தேசிகனே நின்கருணைக்கெல்லையுண்டோ
வித்தகநின்னடியானோர் வணிகன் கானில்
விடநாகந் தொடவரல்கண் டுன்மே லாணை
வைத்தகலமுப்பகலங் கதுசெல்லாமல்
வருந்திநிற்கும் பரிசினைமுற் றுணர்விற்கண்டே
பத்தன்வரப் பணித்தாணை விடுவித்தாங்கே
பணிசெலவிட்டமுதுண்டாய் நின்னேராரே ... ...(33)

நின்னருட் சீர்பாடியவே லாயுதப்பேர்
நிபுணனுடல் வீங்கியவெம் பாண்டுநோயாற்
பன்னரிய துயர்மேவிப்பண்டிதத்தாற்
பலன்காணானின்கோயில் வாயிற்பள்ளி
துன்னினனாய்க் கிடந்தழல்கண் டவனாகத்தைத்
தூயதிரு மலர்க்கரத்தாற்பரிசித்தன்னான்
இன்னுயிர்கா த்தனைராம லிங்கத்தேவே
யென்னிசைப்பே னின்சித்தின் பெருமையானே ... ...(34)

Scanned by CamScanner

யானுரெங் கோனுரென் றறியாதேனை
யினிதாளு மிராமலிங்கமணியே நீதான்
மேனுளோர் பிரமவிராக் கதனுற்றுன்ப
மேவியவந் தனைனின்பால் வருமுன்னோக்கி
யானுதங் கமரடியார்க்கறிவித்தன்னு
னணைபோதிலவணிருக்கப் பணிமினென்றே
தானுகத் தனியிருந்தன் னவனைக்கூவித்
தரிசனந்தந் திடரொழித்தாய் கருணையென்னே ... ...(35)

கருணைநெடுங் கடலேயிராம லிங்கக்
கண்மணியேயடியர்புடைசூழச்சென்றோர்
தருணமொரு பதிக்கேகியாமந்தன்னிற்
சயனித்த புறந்திண்ணைசேரோர் வீட்டில்
இரணமனந் தளர்ந்து குன்மநோயான் மாழ்கோ
ரிரெட்டி யழுங்குரலொலிகேட் டில்லத்துட்போய்ப்
பருணிதர் மெச்சிடத்துளசிக் குடிநீ ருண்ணப்
பணித்திடர்நீக் கினைதன்வந் திரிநீபோலும் ... ...(36)

திரியாத மனத்தன்ப ஞோர்வேளாளன்
றிகழ்கூட லூருறைவான் றன்னோர்மைந்தன்
தரியாத சுரப்பிணியா லிறுதிசாருந்
தருணமுற நினைநாடியீன்றோ ரேத்தப்
பிரியாத பெருஞ்சபையோர் கேட்கஞானம்
பேசுங்காலுணர்ந்து சித்தொன்றுடிக்காத்தாய்
கரியானு யெவ்வுயிர்க்குமிராமலிங்கக்
கண்மணி நின்பெருமையவன் விளம்பினனே ... ...(37)

விளம்புபல சித்துவிளையாடல் செய்தாய்
வித்தகரா மலிங்ககுரு மணியே புன்செய்
வளம்புனைசிற் றூர் மேட்டுக் குப்பந்தன்னில்
வசித்திடுநா ளங்கணைந்தோர் சித்தனுக
தளம்பல தீ யிடைவைத்தா டகஞ்செய்தீந்தான்
தன்புடை சூழ்ந்தவர்க்கெனல்கேட்டவனைக்கூவி
இளம்பிளை செய் யேவிதெ ன்றுய் மீட்டுஞ்செய்தான்
இருந்தைகண்டான் கருங்குழியாரிசைப்பா ரீதே. ... (38)

தொன்றே பலவென்பார் நின்சித்தாட
வினிதுணர்ந்தோர் கேட்பவருக் கிராமலிங்க
மூதுணர்வோய் முழுப்புலவோயென்னுன் சொல்வேன்
மூதுதவ நீ யாற்றிய நாட்சாலை தன்னில்
ஆதுலருக்கமுதிலையென்றடுத்தோர் கூற
அகங்கசிந்து சிவத்தினையோர் பதிகம்பாடிப்
பாதமலர் துதித்தனைதண் டுலம்பல்பாண்டில்
பல்பதி நின்றடைந்தன கண்டார்பல்லோரே ... ...(39)

பல்குணத்துப்பன்மாந்தர் தமக்குங்கால
பயநீங்க நயம்படுசொல்லாலிறந்தோர்
சில்கணத்திற்றம் முயிர்பெற்றெழவே செய்யுஞ்
சித்தகுரு வருதருண மிதுவே யென்றாய்
நல்குணவுண் டாங்கிருந்தார் நேயர்ஞான
நலமறியாரிகழ்ந் தொழிந்தாரிராமலிங்கத்
தொல்குருவே யினையவருள் விளையாட்டென்று
தொடங்குவதோ தெளியும் வணமறிவிப்பாயே ... ...(40)

(வேறு)

அறிவினையறிந்தாயாங்கே யறிவினுக்கறிவு தன்னைப்
பிறிவினை யின்றிக்கூடிப்பேரொளி விளக்கம் பெற்றாய்
செறிவினை யிலாத ஞான சித்தராமலிங்க நீநல்
லுறவென வுளப்பூங்கோயி லுனைநிறி இத் துதிக்கின்றேனே ...(41)

துதிக்கென யியக்குஞான சொரூபனு மிராமலிங்கன்
மதிக்கொரு விளக்காநின்றான் மலவிருள் விலகச்செய்வான்
விதிக்குநானஞ்சவையான் வேட்கைதீர் விமலமுத்திப்
பதிக்குநற்றுணையுமாவான் பானுமண்டலத்தினனே ... ...(42)

பானுமண்டலத்தோர் ஞான பானுவாம்பர்க்க மூர்த்தி
தானென நமையாள்கின்ற சற்குரு ராமலிங்கக்
கோனுயர் சித்திமூன்றுங் குலவநம் பால்வழங்கு
வானென மதித்து நெஞ்சே வணங்குது மவன்றாட்போதே ...(43)

Scanned by CamScanner

போது வீண் போதராமற் புண்ணிய னிராமலிங்கக்
கோதுநீர் ஞானமூர்த்தி குரைகழற் கமலம்பாடி
யோதுமெண் சித்திமுத்தி யொன்றிவாழ்ந்திடலாநெஞ்சே
மீதுநீ விழைந்தாயென்னி னிறைபணி புரிகுவாயே ... ...(44)

இறைபணி செயமலங்க ளிரிந்திடு மெனுமெய்ஞ்ஞான
மறைமொழி யுணர்ந்த நெஞ்சே வருதிநம் வடலூராளி
குறையறு மிராமலிங்க குருநமைக் குறிக்கொண்டாளத்
திறைசெலுத்துதல்போ லன்னோன் சேவடி பாடலாமே ...(45)

பாடல மாலை போலப் பாடல மாலை சாத்தி
நாடல கிலாத சுத்த ஞானநம் பாலதாக
வாடல மாகியின்ப வாழ்வுற விராமலிங்கர்
தாடலை வைத்து நெஞ்சே தருக்கறத்துதித்து நாமே ... ...(46)

நாமெனு மகந்தை தீர நஞ்செய லவனதாகப்
பாமர நீங்கஞானப் படிவமுற்றருள் விலாசத்
தோமறு வடலூர்மேய தொல்லருட் பெருஞ்சோதிக்குட்
போமள விராமலிங்கன் பொன்னடி புகழுவோமே ... ...(47)

புகழுவோமிராமலிங்கன் பொன்னடி வணங்கு கிற்போ
மிகழுவோஞ் சனனவல்ல வின்னருட்டுணையினாலே
யகழுவோ மாணவத்தை யருட்பெருஞ் சோதிக்குள்ளே
திகழுவோ ஞானானந்தத் தேனினைப் பருகுவோமே ..., ...(48)

பருகுமின் னமுதமொப்பான் பளகிலா விராம லிங்கன்
தருகுவ னிதுநாள் காறுந் தராதபே றெய்தும் வண்ணம்
வருகுவென் புவிவாழ்விக்க வாய்மையீ துணவொன்பான்போ
அருகுமென் னிடத்துவந்தா னுரைத்தசொற் பணிகொண்டானே ...(49)

கொண்டல்வந்துறங்குஞ் சோலைக் குளிர்நிழல் வடலூர்மேய
வண்டர்க ளுத னெம்மானருட்பெருஞ் சோதிக்காளாய்த்
தொண்டது செய்யப்பெற்றேன் றூயவ னிராமலிங்கன்
பண்டைநற் றவத்தாலென்னைப் பற்றினின் றசைத்தலானே ...(50)

(வேறு)

(தனன தானதன தானதந்தனு)

அசை விலாதவயி ராக மொன்றிலே
னகில வாழ்விலக மாலொ ழிந்திலேன்
வசையி னீதிநெறி யேநடந்திலேன்
மறம தேபுரிய நாளுமஞ்சிலேன்,
கசிதலே துமறியேனு ளன்புதீர்
கடைய னேனுமுய்யு மாறிரங்குமோ
இசைதவாதவடன் ஞான மன்று வாழ்
இறைவ ராவொளிரிராம லிங்கமே ... ...(51)

(தான தனத்தன தான தய்யனு)

மேனி மினுக்கிய மாதரல்குல்வீழ்
வேனை யுனக்கினி தாளவல்லை நீ
ஞான நெறிக்கிசை யாத புல்லனே
னுடை மருட்பிர சாத நல்குவாய்
பானு நடுத்திகழ் சோதி மெய்யனே
பாச மறுத்தவர் மேவு துய்யனே
வானை நிகர்த்தருண் மாரிபெய்யுமோர்
மாசிலருட்பிர காச வள்ளலே ... (52)

(தனத்தன தானன் தான தந்தனு)

அருட்பிரகாச விராம லிங்கனார்
அருட்சிவஞான விநோதமைந்தனார்
மருட்சுக மாயையி னுடல்வென்றுளார்
வடற்சபை மேவிய சோதி நண்பனார்
தெருட்பத வாரிச நாடுமென்கணே
செழித்த மகேசரெனாவெதிர்க்துகார்
இருட்பிணி தீருப தேச மொன்றுநோர்
எழிற்குரு வாயினர் தேர கண்டரே ... (53)

Scanned by CamScanner

(தந்த தானதன தான தந்தனா)

கண்டு போலமொழி யாடு மங்கைமார்
கண்செய் மோகமடையாத சிந்தையார்
தொண்டர் சூழ்குருவிராம லிங்கனார்
சுந்தரானன சரோரு கந்தனே
டண்டு பானுமதி நீர்மை யொன்றிவாழ்
அங்க ணாளரெமை யாளு மன்பனார்
கொண்டல் போலவுப காரமிஞ்சினார்
குன்றின் மீதிலகுசோதி யென்பரே ... (54)

(தான தாந்தன தான தந்தனா)

சோதி வாய்ந்தவிராமலிங்கனார்
தூய தாங்கழல் பாடுமன்புளார்
கோது தீர்ந்தவராகி யெங்குமே
கோயிலாண்ட மகேசர் பங்கில்வாழ்
மாது போன்றறமே புரிந்துசீர்
வாழ்வு மாந்தர்கள் சாரமுந்துவார்
தீதெலாங்களை வார் விளங்குவார்
தேவர் வாஞ்சைசெய் பேறடைந்தரோ ... (55)

(தனன தாத்தன தானதந்தனா)

அரிய சீர்த்தவ சாதனங்களா
லருளி னாட்டமொடேமுயன்றிலேன்
பிரியமாய்ச்சக காரியங்களே
பெருகும் வேட்கையறாத சிந்தையேன்
துரிய மேற்கிளர் சோதியின்பு தோய்
சொருப மாட்சியிராம லிங்கனார்
கிரியை நீக்கிய ஞானமென்கணே
கிளரவேயருள் வார்கொ லன்பினே ... (56)

Scanned by CamScanner

(தந்த தன்னன தான தந்தன)

அன்பு பின்னிய தான சிந்தையா
ரஞ்ச லென்னுமி ராமலிங்கனா்
இன்பு மன்னிய வாழ்வு கொண்டுளா
ரெங்க ளன்னை பிதாநி கர்ந்துளார்
வன்பில் பொன்னுடலோடி லங்குவார்
மன்று ளின்னட நாய கன்றிரு
முன்பு துன்னிருவோரி னின்றுளார்
முண்டகன்முதலோரு மொஞ்சவே ... (57)

(தந்தன தனதான தந்தன தந்தன)

ஒஞ்சியே மடமாதி னண்பலார் முன்புபோ
யொன்றுமே குறையோதி நின்றிலே னுன்கணே
யஞ்சிடேன் முறையோத நின்றுளே னின்றுநா
னங்கண குரு ராமலிங்கமே வந்துகா
வஞ்சமாகிய மாயை யின்பொலா விம்பமா
மைந்துசேர் மனமா லடங்குநாளென்றதோ
தஞ்சநீ யெனையாளமுந்துவாய் முந்துவாய்
சங்கரா வடலூருண் மன்றுவாழ் தந்தையே ... (58)

(தந்தன தானன தனதான தந்தன)

தந்தைநீ தாயுநீ குருராமலிங்கமே
சங்கையே தீருமாறெனையாளமுந்திநாய்
மைந்தன னுகினே னிசைபாடு மன்பினன்
மங்களா காரமா முனதாள் வணங்குவேன்
சொந்தனீயாகினுய் துணையாக நின்றுளாய்
துங்கமார்வாழ்வுசேர் சிவபோகவின்பமே
யெந்தநாளீகுவாய் வடலூ ரமர்ந்தவா
வென்றுமேளோர் சோதிபோல் விளையாட கண்டனே ...(59)

(தனதான தந்த தனதான தந்தன)

விளையாட வந்த பரஞான சித்தனூர்
விதியாதியும்பர் பணிபேறு பெற்றுளார்
சளையாத விந்து தனிலே யுதித்ததோர்
சககோடி யெங்குமொளிரா தவத்தினூர்
கொளையாடுகின்ற கொடுநோய் மருத் தனூர்
குருராம லிங்கர் சரணும் வழுத்துவோம்
இளையாமனின்று தவமே யியற்றுவோ
மெழிலாரணஞ்சொ னெறியே வளர்ப்பமே. ... ...(60)

(வேறு)

ஆரணஞ்சொனெறியே வளர்க்கவுன தருளையே பெரிது நாடுவேன்
அது குறித்துனது பாததாமரையி லணியுமாறுதமிழ் பாடுவேன்
பாரடங்கலு நிறைந்தசோதியது பரமெனுந்தெளிவு மேவியே
பல்லுயிர்த்திரளு மொன்றை நோக்கிவழி பாடுசெய்து மதபேதமாம்
போரகற்றிமகிழ் வுற்றபேதமொடு பொருவிலாதவொரு தாதைநேர்
புதல்வர்போன்மருவிவாழும் வண்ணமிகுபுனிதநின்வருகையுன் னுவேன்
காரணக்குருவி னீவெளிப்படுமொர் காலமென்றது புகன்றிடாய்
கருணை தங்கியவி ராமலிங்ககுரு கனகவிம்பநிகர் துங்கனே ...(61)

துங்கமேவுசிவ சோதி யேதுரியசோதி யேகமெனு முணர்வினூற்
றுவிதமற்ற பெரி யோருளத்திலகு சுந்தரக்குரிசி னீயென
வங்கணீருலகி லாரணம்புகலு மந்த மாறுமொரு சமரச
மாகுமென்றுணர்வி லனுபவத்திலுண ரறிஞர் கூடியசன்மார்க்க நற்
சங்கமொன்றனை வளர்த்த தோர்தலைமை சாரு மாசிரிய னூகினாய்
தத்து வத்தலைவர் பலம தத்தலைவர் தாம தித்திடவிந் நாளிலே
எங்க ளுக்கனைய சமர சங்குலவு மினிய ஞானசபை நேர்திகாண்
இராமலைம்புல னெலாமடங்கவெ லிராமலிங்ககுரு நாதனே ...(62)

Scanned by CamScanner

நாத தத்துவ முடித்தலத்தினட னம்பு ரிந்திலகு தூயதோர்
ஞான நாடகர்பொ னம்பலத் திறைவர் ஞாலமுய்யவட லூருளே
யாதரத்தினொடு தாமெழுந்தருளுமாறு சிற்சபை யமைத்துளா
யன்ன தோர்சபையி லவரெழுந்தருள வவருடன் றொடருநேயமார்
மாத வப்பெரிய ரோடுநீயும்வரு மாட்சிமைக்குரிய காட்சியிம்
மகியி லித்தருண நடைபெறிற் கருணைவள்ளலேயுனையெல் லோருமே
யேத மற்றகுரு வென்ப ரின்னசெய லெந்த நாணிகழுமோ சொலா
யிராம லஞ்சுமல நிராமயங்குலவு மிராமலிங்ககுரு மூர்த்தியே ...(63)

மூர்த்த மத்தனையு முனது சுத்தவருண் மூர்த்தமென்று தொழுமன்புகம்
முதல்வர்கொண்டருளுமூர்த்தமேயுனது மூர்த்தமென்றுணர்விவேகமும்
போர்த்தமூலவிருள் கெடவு னதடிகள்போற்றி வெல்லுநல தீரமும்
புலையி னோடுகொலை நிகழ்த ராமலருள் புரிகொ லாவிரத மாட்சியுஞ்
சேர்த்த தேகமிசைமுத்தி யின்கணுயர் சித்திபெற்றொளிர் விசேடமும்
சித்தர் மூத்தர்தம தருளினுக்குரிய சிறிய னென்றெனையு மேற்றிடக்
கூர்த்த நின்கருணை நோக்குமென்புடைகுலாவ வைத்தருள வேண்டுமால்
கொண்டனேர்தருமிராம லிங்ககுரு குன்றின்மேலிலகு தீபமே ...(64)

தீப மொத்திலகு ஞானதேகமது தெரிதராதுடை யுடுத்துநீ
திரையினுட்குலவு சிவமெனப்பெரியர் சித்தர்கைதொழ வுலாவினாய்
கோபமற்றகரு ணாக ரக்கடவுள் கொள்கை யீதென வுணர்த்தியே
குவலயத்தனை யடுத்தமாந்தர்புலை கொலைசெயாவகை விலக்கினாய்
தாபமார்சனன மரண நோய்முதல சங்க டங்கள்கெடு மாறுநற்
றயவி னோடுசெயு மன்ன தானநிகர் தானமின்றென விளக்கினாய்
நீபமாலைபுனை முருகவேளருளுநிமல ஞானமது பெற்றவா
நிலவு மெய்ப்புக ழிராமலிங்கனெனு நிதனேயருள் விநோதனே...(65)

அருண்மொழிப்பெருமையுலகெலாமுணரெனரிய பாப்பொருள்விரித்தனை
யவ்விருத்தியுரை யுலகெனுஞ்சொலள வமைவதாயினது கண்டபேர்
பொருள்செய் நுண்ணறிவு பெற்றிலார்தமது போதமேற்படுத னோக்கியே
போற்றுவார்சிலர் பொறாமை யாலிகழ்வர்புகழ் வினோடிகழ்வுநாடிலா
விருண்மலத்தடையி னீங்கிவாழ்பெரிய ரிட்டமேவியவி சிட்டனே
யினிய நெஞ்சறி வுறுத்தலாலரனை யெய்துசாதனம் விளக்கினாய்
மருள கற்றியவ ருட்ப்ர காசனெனும் வள்ளலாகுமொரு தெள்ளியோய்
மாதவக்குருவிராம லிங்கமென மண்ணுளோர்புகழு மண்ணலே (66)

Scanned by CamScanner

அண்ணன் முக்கணர னளவிலாதபுக ழுறைய வல்லவருள் வாக்கினி
யதிக னென்பர்பலர் தமிழ வாவுடைய வறிஞர்தங்தமுள் வியப்பரால்
வண்ண நின்றுதி யடங்கலுந்தமிழின் மதுரமாமது மணக்குமே
வாதவூரர்திரு வாசகத்தினிது மனமுருக்கவல தென்பரே
யெண்ணலாகுமுயர் திருநெறித் தமிழினிலகு சாரமெனலமையுமே
எந்தை நீகுரவர் நால்வர் மீதுபக ரின்றமிழ்க்கெவர் வணங்கிடார்
கண்ணி னுவிரவி மதிநலம்பெரிது காட்டிநின்றகரு ணாகர
கானி லங்குவடலூருண் ஞானசபை கண்டமாதவம கத்வனே ...(67)

மகத்துவம்பெருகு ஞானசித்திபுர மன்னு சிற்சபையு ளுதனர்
மாசிலாதசிவ சோதிபாதமலர் வனையு நின்றுதி யடங்கலுஞ்
சகத்து வந்துலவியந்த மாறுமுறு சமர சந்தனை யுணர்த்தியே
தமிழினின்பினையுநன்குகாட்டுமொருதன்மைவாய்ந்துமிளிர்சீர்மையால்
அகத்து நாடுமவர் தமைவசிப்பதென வதனை யோதுநரு மாயினுர்
அன்னவாறுதமிழ் பாடவும் பழகுமறிவுடைக்கவிஞர் கற்பரான்
மிகுத்த நின்பெருமை பேசுநின்பனுவல் வேறு கூறுநரும் வேண்டுமோ
விண்மணிக்கிணை யிராமலிங்கமென மேதையோர்கள்பகர் போதனே()

மேதையோர்கருது போதபானுநிகர் புண்ணியக்கருணை வள்ளனின்
புதுமலர்க்கமல பாத மீதடிமை புனைதருந்தமி ழுவத்தியோ
பாதகக்கொடிய னேனை யுன்றனது பணிசெயும்படி வசிப்பதென்
பவமெலாமறவுய் விக்கநாடியதொர் பரிவுகாட்டினைகொலுணர்கிலேன்
பூதலத்தவர் வியக்க நீவருமொர் போது கண்டுனடி யார்குழாம்
புக்கு மிக்கொளிர வார்வமேவியது புனிதநின்னுள மறிந்ததே
ஆதலாலெளிய ரேங்களுக்கருள வண்ணலேவருதல் வேண்டுமால்
அமல சற்குருவி ராமலிங்கமென் வறையுநேயர்கள்ச காயனே ...(69)

காயமீதுமிகு மாயமாகும்வரு காலனுர்கவரு முன்புசா
காத கல்விபெற வேண்டுமென்றறிஞர் கட்கு மாசிலுரை பேசினுய்
தூய வித்தையது தேருபாயமெவர் சொல்ல வல்லர்சக மீதிலே
துணையெமக்குனது கருணையென்றுனடி தொழுதுவாழ்த்துமெமை யா
ளுய ஞாதுருவு ஞானமுங்குலவ னீத்தவத்துவித நிலையிலே [ளுவாய்
நீக்கமற்றொளிரு மிணையிலாமவுன நிர்க்குணத்தொடுறை மேலவா
தேயமெங்கணு நிலாவு கின்றதொரு சித்திபெற்றசிவ சித்தனே
தேசிகோத்தம விராமலிங்கவுயர் சிற்குணக்கடலி னமுதமே ...(70)

Scanned by CamScanner

(வேறு)

கடலினமிர் துண்டார் கடைந்திமையோர் நீமதியா
லுலவினமிர் துண்டா யுயர்சொருப் சித்திபெற்றாய்
மடலின்மலர்த் தேன்போற் றிருவருட்பா வாய்மலர்ந்தாய்
வடலூறைறயி ராமலிங்க மாமணியே யெண்குணனே ... ...(71)

குணமாய்க் குணியாய்க் குலவுகிற்பாய் பூவின்மது
மணமாய் விளங்கியெம்மை வாழ்விக்குங் கோமானீ
கணமாய்த்திகழு மொரு காலபர மேலாமந்
தணமா மிராமலிங்க சற்குருநின் சேவைநல்கே ... ...(72)

சேவையெனக் கீந்தே திமிரமல நீக்கியயற்
பாவையுன தாட்புனைந்தென் பாற்கருணை வைத்தருள்வாய்
தேவையிடத் தோங்கு மிராமலிங்கத் தேவெனநீள்
பூவைமிகச் சீர்திருத்தப் போந்தகுரு புங்கவனே ... ...(73)

புங்கவர்போன் மன்னுயிர்பாற் பொன்றாப் பெருந்தயவு
தங்கவளர் காருணிய சாகரமா நீதழைத்தாய்
துங்கநிறை ஞானவருட் சோதியுருக் கொண்டொளிரும்
மங்களவி ராமலிங்க மணிநின்சீர் வாழியவே ... ...(74)

வேதா கமம் புகலு மெய்ப்பொருளை யாறந்த
மீதா கியசிவத்தை மேவியருட் சித்திபெற்ற
நாதா விராமலிங்க நம்பா வுனையடைந்தே
னீதா வெனைத்திருத்தி யாண்டருள்வாய் நின்னடிக்கே ...(75)

அடித்தா மரைமலரை யன்பதனாற் பற்றிநின்றேன்
பிடித்தா யெனைநீநின் பேரருளாற் பெம்மானே
பொடித்தான் புனைந்தொளிரும் பொன்மேனி ராமலிங்கா
முடித்தாளை னெண்ணமென முன்னியுனைத் தொழுவேனே ...(76)

வேனில்வேண் மால்கூர்பொன் மேனியுறுங் கட்டழகா
நானின்மே விச்சைகொண்டே னுதா வெனைப்பிடித்தாய்
வானின்மே விச்சையற்றேன் வள்ளலிராமலிங்கா
தேனின்மே லாஞான சித்திநெறி தெரித்தருளே ... ...(77)

...ப்பப் ம... ...னக்கே... ...(78)

...பேசாத மோனபத
...ட்டு மிராமலிங்க மெய்க்குருவே
...ங்க்கு மொளிவடிவோ யுன்னொடுநான்
...றனைத்து மில்லா விளக்கமுறச் செய்தருளே ... ...(79)

செய்வா யடுத்தார் திருந்தும்வகை யெல்லாநீ
பெய்வாய் முகில்போற் பெருங்கருணை மாரிநின்போ
லுய்வாழ் வெனக்கருள்வா யொப்பி லிராமலிங்கச்
சைவாநற் சைவந் தனைவளர்க்க வந்தோனே ... ...(80)

(வேறு)

வந்தா யுருக்கொண்டு தமியேனை வாழ்விக்க வன்றோநிரா
முந்தா சனத்தே யிருந்தாயொண் மலர்நேர் முகங்காட்டினை
யெந்தாதை யேராம லிங்காநி னருள்வண்மை யென்சொல்லுவேன்
சிந்தா மணிச்சேவை சிந்தாகுலத்தைச் சிதைத்திட்டதே ...(81)

சிதையாத வொளியானதிருமேனி பெற்றுச் சிறந்தோங்குநின்
இதையார விந்தத்தி லருளன்றியிருளேது மின்றென்பதைச்
சுதையாரு மொழியோடு நடைகாட்டு மயலார்கள் சொலவேண்டுமோ
விதையாசை யறவென்ற குருராமலிங்கைய விமலேசனே ...(82)

விமலர்க்கு வடலூ ரருட்சோதிநாதர்க்கு மெய்யன்புசெய்
முமலச் செருக்கற்ற மாராம லிங்கன்பொன் முளரிப்பதங்
கமலக்கரங் கூப்பியேத்து ந்திருத்தொண்டர் கட்கிம்மையே
தமலக்கணங்கண் டருட்பேறு சார்தன்மை தானெய்துமே ...(83)

தானென்று மவனென்று மிருதன்மை நாடாது தானந்தமில்
வானென்று நின்றானை வாராவரத்தாகி வந்தெம்மையாள்
கோனென்ற குருராம லிங்கந்தனைக்கண்டு கூடுந்தவர்
தேனென்ற சித்திக்குமுத்திக்கு மயனாடு செல்லார்களே ...(84)

வறு)

செல்லொன்று மின்போல வ...மயோர் நீமதியா
சொல்லொன்று தமிழ்வேட்ருப் சித்திபெற்ருய்
யல்லொன்று மஞ்ஞான நீங்வருட்பா வாடலர்ந்தாய்
இல்லொன்றுமெனையாள வருராமலிங்காவென ... ...(71)

இதயார விந்தத்தை யலர்விக்க வெழுஞான வாதித்தன்
சிதையாவுனருள்கொண்டு சிறியேனு ளெல்லாந் தெரிந்தின்பு
மதயானை நெஞ்சத்தினிருணீக்கி யொளியாக்க வரல்வேண்டுமோல்
சுதயாக ராராமலிங்கா வருட்சித்தர் சூழ்தோன்றலே ... ...(86)

தோன்ருத துணையாக வொளிர்கின்ற நீயெங்க டோன்றுந்துணை
நான்ருனெனப்பள்ளி தனைநீத் துருக்கொண்டு ஞானந்தருங்
தோன்ருனெனப்பாரி லுறைவோர் குறிக்கொள்ள வெளிவந்தருள்
என்ருனினுந்தாழ்த்தலெந்தா யிராமலிங் காசார்யனே ...(87)

ஆசாரி யாராம லிங்காவு னடியாரை யாடற்கெனத்
தேசாருருக் கொண்டுவரவேண்டு மிதுவேளை செகமீதினி
பேசாத்திருப்பள்ளி தனைநீக்கிடாயேற் பிணக்கின்றியெம்
மீசா வருட்சோதி நெறியார்க்கு மொன்ருத லெவ்வண்ணமே ...(88)

ஒன்ரும் பரஞ்சோதியொடு கூடியுறைவா யுருக்கொண்டுநீ
நன்ருக வெளிவந்து சித்தாடலிது காலை ஞாலத்தின்மே
னின்ருர்கள் காணச்செய் வாயேனு னருளாட்சி நிலைநிற்குமால்
வென்ருடு மாராமலிங்கார்ய வீதென்றன் விண்ணப்பமே ...(89)

விண்ணப்ப மொன்றுண்டு தமியேன் மனத்தொன்றும் விழையாதசீர்
நண்ணப் பணித்தாண்டு கல்லாமையில்லாமை நனிநீக்குவா
பெண்ணப் படிக்கென்று துதிகூறுமெனையாள விதுவேளைகாண்
வண்ணப் பரஞ்சோதி சபைகாண வடலூருள் வருமுத்தனே ...(90)

(வேறு)

முத்திநல்கு சித்தசுத்தி முழுதும்வேண்டு நின்னடிப்
பத்திவேண்டு நினதுசீர்கள் பாடவேண்டு நாயினே
னித்தஞான சித்திபெற்று நிலவியெங்கு நின்றவா
வத்தனேடெ னன்னையாகு மனகராம லிங்கமே ... ...(91)

...(92)

...ந் பத்தியுஞ்
...ாலவர் சேவடிக்க ணன்புநின்
...டைந்த வருணினைந்து பாடுபரிசும் வேண்டுமோன்
...லயேர்க ளந்தஞான மோனராம லிங்கமே ... ...(93)

மோனவீடு கூடுமுன்பு முற்றுணர்வு சேரவும்
தானொலாஞ்செய் வல்லசித்த சாமிதயவு வாய்க்கவு
ஞானசித்தியொன்ற வுங்க ணல்கி யாளவேண்டுமோ
லூனமற்ற வாழ்விலோங்கு முசித ராமலிங்கமே ... ...(94)

உச்சிமீது வைத்தபாத முள்ளநோக்கி நிற்கவும்
நச்சிஞான வமிர்தமுண்டு நானிறப்பி லாததோர்
விச்சைதேர்ந்து வாழ்வதற்கும் வேண்டினேனருளுவாய்
செச்சை சேர்பொன் மேனிகொண்ட சீலராமலிஙகமே ...(95)

சீலமிக்க சேவைதந்த செயல்கள்போற்றி ஞானமா
மோலிபூண்ட சென்னிபோற்றி முளரித்தாள்கள் போற்றியென்
பாலிரங்கு கருணைபூத்த பதுமவதனம் போற்றிகல்
லாலமர்ந்த வடிகளானவ் வதுல ராமலிங்கமே ... ...(96)

அதுலஞான மெய்தநோக்கு மங்கணுள போற்றியுள்
விதலைதீர வருள்வழங்கு மெய்த்தவத்த போற்றிபொன்
மதலையானை யேத்திமகிழ்செவ் வாயபோற்றி போற்றிநீள்
மிதுலையாளி நேருஞான வீரராமலிங்கமே ... ...(97)

வீரஞான வேழமாம்வி வேகபோற்றி மழையினு
தாரபோற்றி மூவிரண்டு தமிழ்நயங்கொ டிருமுறை
வாரமோடு வாய்மலர்ந்த வள்ளல்போற்றி யஞ்சுமுத்
தீரபோற்றி போற்றியெங்க டேவராமலிங்கமே ... ...(98)

…று)

தேவருண்ணு மமிழ்தின்மிக்…யோர் நீமதியா
பாவழங்கு சுத்தஞான ப…ப சித்திபெற்ருய்
காவழங்கல் போல்வழ…ருட்பா வாட்டலர்ந்தாய்
ஞயமேலார்ப லோர்வணங்கு ம…ாவென … …(71)

நாத வாழியெம்மை யாளுநம்ப வாழியெ…
போத வாழிஞான சித்திபுரநிவாச வாழிநன்
னீத வாழிராமலிங்க நிமலவாழி யன்பராஞ்
சேத னர்கண்மகிழ வூர்வைதீகத் தேர வாழியே …

(முற்றிற்று.)

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க.

Printed at the National Press,—Bangalore. 1902.

Scanned by CamScanner

...(வேறு)

தேவருண்ணு மமிழ்தின்மிக் ... மையோர் நீமதியா
பாவழங்கு சுத்தஞான பா... ருப் சித்திபெற்ருய்
காவழங்கல் போல்வழ... ...வருட்பா ...லர்ந்தாய்
... லோர்வணங்கு ... ...காவென ... ...(71)

...ம்மை யாளுநம்ப வாழிமய...
...ான சித்திபுரநிவாச வாழிநன்
...ிங்க நிமலவாழி யன்பராஞ்
...ர்வைதீகத் தேர வாழியே ...

With humble (...வ.)

W. [signature]

17. 5. 02

To

T. S. Sivanagaswara Mod. aulyals
B.T. Madras